**O.S.No.17/2012**

**Date:04.02.2019**

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 – பொன்னையா என்ற முகம்மது அப்துல் காதர்,**

**த-பெகாதர் மைதீன் ராவுத்தர்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என உறுதி கூறி கையெழுத்துச் செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 20.10.1920ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.1
2. பட்டா எண்.652ன்படியான பட்டா உண்மை நகல் பி.வா.சா.ஆ.2
3. கிஸ்தி ரசீதுகள் எண்ணிக்கை 22 பி.வா.சா.ஆ.3
4. 04.12.2000ம் தேதியில் வருவாய் ஆய்வாளர் வழங்கிய குறிப்பாணை பி.வா.சா.ஆ.4
5. 15.03.2001ம் தேதியிட்ட வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் உண்மை நகல் பி.வா.சா.ஆ.5
6. சாட்சி பெயரிலான பட்டா பாஸ் புத்தகம் பி.வா.சா.ஆ.6
7. 1389, 1410ம் பசலிகளுக்கான அடங்கல் கணக்கின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.7

வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

(குறுக்கு விசாரணைக்காக வாய்தா மாற்றப்படுகிறது)